[29th October 1962

கைத்தறித் தொழிலாளர்கள்

* 856 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குடிசைத் தொழில்களைப் போலவே கைத்தறித் தொழிலை மேற்கொண்டிருக்கும் தொழிலாளர்களுக்கும் வேறு வகையில் வேலை தர உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No. Sir.

புலவர் கா. கோவிந்தன் : தங்களுக்கு வேறு தொழில் இல்லாத காரணத்தினால்தான், தாங்கள் வாழ வேண்டுமா அல்லது சாக வேண்டுமா என்ற நிலைமைக்குக் கைத்தறி நெசவாளர்கள் வந்து கொண்டிருப்பதால், அவர்களுக்கு வசதி புரிவதற்காக நெசவாளர்கள் பெருவாரியாக வாழும் இடங்களில் வேறு தொழில்களை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நெசவாளர்கள் கூட்டங்களிலே பேசுகின்ற எல்லா இடத்திலும் நான் சொல்லியிருக்கிறேன். "தயவுசெய்து உங்கள் பிள்ளைகளை 8-வது வரையில் படிக்கவைத்துவிட்டு, பின்பு இன்டஸ்ட்ரியல் பள்ளிகளுக்கு அனுப்பி விடுங்கள்." அதிலே பயிற்சி பெற்ற பிறகு அவர்களுக்கு வேலை கிடைக்கின்றது. இன்டஸ்ட்ரியல் பள்ளிகளுக்கு அனுப்பி, ஆர்டிசான், மவுல்டிங், பிட்டர் போன்ற துறைகளில் பயிற்சி பெறச் செய்தால், நல்ல வேலை வாய்ப்புக்கு வசதி இருக்கும். அதுதான் சிறந்த வழி என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. து. ப. அழகமுத்து : அந்தப் பயிற்சிகளில் நெசவாளர்கள் குழந்தைகளுக்கு முதல் சலுகை அளிக்கப்படுமா என்று நான் கேட்கிறேன் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அவர்கள் பின்தங்கிய வகுப்பினர் என்கின்ற முறையிலே அந்த வசதி கொடுக்கப்பட்டு வருகின்றது.

Engineering College for Tiruchirappalli

* 857 *Q.*—SRI V. KRISHNAMOORHY
SRI A. P. DHARMALINGAM
SRI K. A. MATHIALAGAN : } Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to start an Engineering College at Tiruchirappalli?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : திருச்சியிலே அமைக்க இருக்கிற பொறியியற் கல்லூரியை நடைமுறை ஆண்டிலேயே துவங்குவதாக ஏற்கனவேயே சொல்லி வந்தார்கள். இந்தக் கல்லூரியை இந்த ஆண்டில் தொடங்காமல் போனதற்குக் காரணம் என்ன ?